**சார்பு நீதிமன்றம், கீரனூர்**

**அ.வ.எண்.36/2022**

**வாதிகள் தரப்பு 2 வது சாட்சி முருகேசன் என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | வயது | : | 42/2026 |
| தகப்பனார் பெயர் | : | மணி | தாலுகா | : | குளத்தூர் |
| கிராமம் | : | சுருண்டப்பட்டி | தொழில் | : | |

**நாள்: 18.02.2026**

**வா.சா.2**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் வாதிகள் தரப்பு 2 ஆம் சாட்சியாவேன். நான் முதல் விசாரணை நிருபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் படித்து காண்பித்தார்கள். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. ஏற்கனவே 1 ஆம் வாதி மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அதை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | | எனது தகப்பனாரான 1 ஆம் வாதியின் இறப்பு சான்று சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ.7** |
| 2. | | எனது தகப்பனாரான 1 ஆம் வாதியின் வாரிசு சான்று சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ.8** |

**1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் இறந்துபோன 1 ஆம் வாதியின் மகன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 உயில் என் முன்னிலையில் ஏற்பட்டது, அதில் முதல் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 உயிலை எழுதிக்கொடுத்த நபர் மற்றும் எனது தகப்பனார் மற்றும் எனது ஆதார் அடையாள அட்டை இணைக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 உயிலில் பச்சை மையினால் ஆதார் எண் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 உயிலை எழுதிக்கொடுத்ததாக சொல்லும் நபரின் கைரேகை மட்டும் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலில் 2வது பக்கத்தில் 4 வது வரியில் 11

வருடங்களுக்கு முன்பு திருமண உறவு இரத்து பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு என நோட்டரி வழக்கறிஞரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. கணேசன் உயிலை எழுதியிருந்தால் அவரே திருத்தல் எழுதியிருப்பார் என்றும், நாங்களாக உற்பத்தி செய்த காரணத்தால் தான் நோட்டரி வழக்கறிஞர் மூலம் திருத்தி உள்ளோம் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.1 இல் உள்ள புகைப்படம் எனது பெரியப்பா கணேசனின் புகைப்படம் ஆகும். அந்த புகைப்படத்தில் பெரியப்பா கணேசனின் கைரேகை வாங்கவில்லை என்றால் சரிதான். எனது பெரியப்பா கணேசன் உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்றும், நானும், எனது தகப்பனாரும் சேர்ந்து தான் வா.சா.ஆ.1 யை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

6. எனது தகப்பனார் இறந்த பிறகு என்னை தரப்பினராக சேர்க்க கோரி நான் தாக்கல் செய்திருந்த மனுவிற்கு நான் தான் விவரம் சொன்னேன். வழக்குரையையும் நான் படித்து பார்த்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சொன்னேன் என்று சொன்னால் சரிதான்.

7. நான் தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் சரியானதுதான். திருத்தப்பட்ட வழக்குரையில் பத்தி 3 இல் குறிப்பிட்டுள்ள 25.10.2017 ஆம் தேதியிட்ட உயில் பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம்.

8. எனது பெரியப்பா கணேசன் 29.01.2017 ஆம் தேதி இறந்துவிட்டதாக திருத்தப்பட்ட வழக்குரையில் 4 வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. எனது அப்பாவை நான் தான் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றேன் என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் இருந்து வரசொன்னார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு நான் தான் எனது தகப்பனாரை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று விவரம் சொன்னேன் என்றால் சரிதான்.

10. கணேசன் மனைவியான லெட்சுமியின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். கணேசன் இரண்டாவது திருமணம் செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொல்லியுள்ளார்கள், நான் பார்த்ததில்லை.

11. கணேசனுக்கு பாஸ்கரன் என்ற மகன் உள்ளார் என்றால் இந்த வழக்கிற்கு பிறகு தான் தெரியும். மேற்படி விவரங்கள் அனைத்தும் வா.சா.ஆ.1 எழுதப்பட்ட சமயத்திலேயே எனக்கு தெரியும் என்றும், அதனால் தான் நோட்டரி வழக்கறிஞரால் அதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் இந்த வழக்கிற்கு பிறகு தான் தெரியும் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ.6 மனுவை வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு மனு கொடுத்திருந்தால் அந்த மனுவின் நகலை தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் பெற்று தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

13. வா.சா.ஆ.6 மனுவை வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்த போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 இல் கணேசனுக்கு பாகத்தில் பிரிந்துள்ள சொத்தை தான் உயில் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. கணேசனுக்கு பாகத்தில் பிரிந்த சொத்தை தான் உயில் எழுதிக்கொடுப்பதாக வா.சா.ஆ.1 இல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

1,2 பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**S/d – C.Rajesh, B.A.B.L.,**
**சார்பு நீதிபதி, கீரனூர்.**